# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

முன்னிலை : திரு.ஜெ.செல்வன் ஜேசு ராஜா, எம்.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்

2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் நாள் வியாழக்கிழமை

இடைக்கால மனு எண்:363/2016
in
அசல் வழக்கு எண்:286/2015

மாதப்பன் . . . . மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

ரத்தினசாமி ......எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 04.01.2018-ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் திரு.B.பாலமுருகன் மற்றும் திரு.S.இளங்கோவன், வழக்கறிஞர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.A.M.C.பெரியசாமி, வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் இருந்து வந்த இம்மனுவில் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலினை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்த மேற்படி வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 26 விதி 9 பிரிவு 151-சி.பி.சி-ன் கீழ் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து தாவா சொத்தை பார்வையிட்டு அதன் பௌதீக இயற்கை அமைப்பினை பார்வையிட்டு அதில் இருக்கும் வண்டித்தடம் மற்றும் தண்ணீர்குழாய் மற்றும் இதர நிலவியல் அமைப்பை பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடத்தை சமர்ப்பிக்க வேண்டி மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு இதுவாகும்.

1) மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:-

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதியாவார். அசல் வழக்கானது மனுதாரருக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தில் மனுதாரருக்கு வண்டித்தட உரிமை மற்றும் தண்ணீர் எடுத்து செல்வதற்கு உரிமை உள்ளது. மேற்படி மனுதாரரின் உரிமையானது இந்த நீதிமன்றத்தால் முந்தைய வழக்குகளில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பது இந்த எதிர்மனுதாரருக்கு நன்கு தெரியும். மேற்படி முந்தைய வழக்கில் இந்நீதிமன்றத்தால் இந்த மனுதாரருக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள

உரிமை தடுப்பதற்காக இந்த எதிர்மனுதாரரை முந்தைய வழக்கில் வாதிகள் தூண்டிவிட்டு, இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி உண்மை நிலவரங்களை இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்துவதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் அவசியம் என்பதால் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் நிலவியல் அமைப்பினை நீதிமன்ற ஆணையாளர் பார்வையிட்டு உண்மை நிலவரத்தினை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்துவதால் அதிகமான வாய்மொழி சாட்சியங்கள் குறைக்கப்பட்டு இந்நீதிமன்ற நேரம் விரையம் ஆகாமல் பாதுகாக்கப்படும். மேலும் நீதிமன்ற ஆணையர் நியமனத்தால் எதிர்மனுதாரருக்கு எந்த இழப்பும் ஏற்பட போவதில்லை. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டால் மட்டுமே உண்மை நிலவரங்கள் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வரும். நீதிமன்ற ஆணையர் நியமனமானது இருதரப்பு உரிமைகளையும் எந்தவகையிலும் பாதிக்காது. எதிர்மனுதாரர் உண்மை நிலவரங்களை மறைத்து அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதை இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்துவதற்கு ஆணையர் நியமனமானது அவசியமானது. எனவே நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து தாவா சொத்தை பார்வையிட்டு அதன் பௌதீக இயற்கை அமைப்பினை பார்வையிட்டு அதில் இருக்கும் வண்டித்தடம் மற்றும் தண்ணீர்குழாய் மற்றும் இதர நிலவியல் அமைப்பை பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடத்தை சமர்ப்பிக்க வேண்டி மனுதாரர்/பிரதிவாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

இந்த மனு பொய்யானதும், மோசடியானதும் சட்டவலிவற்றதும் ஆகும். இந்த எதிர்மனுதாரரை ஏமாற்றும் நோக்குடன் சமூகம் நீதிமன்றத்தில் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஒன்று ஆகும். தாவாச் சொத்தில் இந்த மனுதாரர்/பிரதிவாதிக்கு வண்டி தடப்பாத்தியமும் மற்றும் தண்ணீர் எடுத்துச் செல்லும் உரிமையும் இருப்பதாக குறிப்பிட்டுள்ள சங்கதி பொய்யானதாகும். மேற்படி சங்கதியான அதாவது தாவாச் சொத்தின் வழியே தண்ணீர் எடுத்துச் செல்லும் உரிமையும் மற்றும் வண்டித்தட உரிமையும் இந்த மனுதாரர்/பிரதிவாதிக்கு எந்த முறையில் பாத்தியப்பட்டது என்பதற்கான எந்த ஆதரவினையும் இந்த மனுதாரர்/பிரதிவாதியானவர் இம்மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யவில்லை. ஏற்கனவே ஒரு வழக்கு நடவடிக்கை இருப்பதாக இந்த மனுதாரர்/பிரதிவாதி குறிப்பிட்டுள்ளாரே தவிர அதனைப்பற்றிய விபரத்தை எதனையும் குறிப்பிடவில்லை. இந்த எதிர்மனுதாரர்/வாதிக்கு முந்தைய வழக்கு

நடவடிக்கை தெரியும் என்கிற மனுதாரரின் அபிடவிட் சங்கதி பொய் ஆகும். உண்மையில் இந்த தாவாச் சொத்து குறித்து இந்த மனுதாரருக்கும் இந்த பிரதிவாதிக்குமிடையே எந்த முந்தைய வழக்கு நடவடிக்கையும் இல்லை. முந்தைய வழக்கின் அசல் வழக்கு எண்கள் (OS. No.) எதனையும் குறிப்பிடாமலேயே மற்ற வழக்கின் வாதிகளின் தூண்டுதல் பேரிலேயே இந்த எதிர்மனுதாரர்/வாதியானவர் இந்த வழக்கை சமூகம் கோர்ட்டில் தாக்கல் செய்திருப்பதாக குறிப்பிட்டுள்ள சங்கதி பொய் ஆகும். உண்மையில் இந்த மனுதாரர்/பிரதிவாதிக்கும் மற்ற நபர்களுக்கும் இடையே நடந்த வழக்கு சங்கதி பற்றி இந்த எதிர்மனுதாரர்/வாதிக்கு எதுவும் தெரியாது. ஏற்கனவே மற்றொரு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இருப்பதாக மனுதாரர்/பிரதிவாதி குறிப்பிடுவதற்கு சரியான ஆதரவு ஆதாரங்களை இம்மனுவுடன் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. மேலும், இந்த மனுதாரர்/பிரதிவாதி குறிப்பிடுவது போன்று இந்த எதிர்மனுதாரர்/வாதி, மற்றொருவரின் தூண்டுதலின் பேரிலோ, மற்றொருவரின் கருவியாக இருந்தோ இவ்வழக்கினை தாக்கல் செய்யவில்லை. இந்த எதிர்மனுதாரர்/வாதியின் இந்த தாவா சொத்தில் இந்த மனுதாரர்/பிரதிவாதி சட்டப்புறம்பாக குறுக்கீடு செய்ததினாலேயே இந்த வழக்கை இந்த எதிர்மனுதாரர்/வாதி சமூகம் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளார். தல அமைப்பு (Topography of Suit Property) பற்றிய விவரங்களை அறியவே கமிஷனர் ஒருவரை இவ்வழக்கில் நியமித்திடவேண்டும் என இந்த மனுதாரர்/பிரதிவாதி குறிப்பிடுவதும் இந்த வழக்கான நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரப்பட்ட வழக்கில் தொடர்பற்ற ஒன்றாகும். எதிர்மனுதாரர்/வாதியின் இவ்வழக்கு நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரப்பட்ட வழக்காகும். நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரப்பட்ட வழக்கில் Collection of Evidence-க்காக வேண்டி மனுதாரர்/பிரதிவாதி இந்த கமிஷன் மனு செய்துள்ளார். அசல் வழக்கில் பதிலுரை மற்றும் எதிருரை தாக்கல் செய்யாமலும், மனுதாரர்/பிரதிவாதியின் எதிர்வாதம் என்ன என்பது பற்றிகூட மனுதாரர்/பிரதிவாதி தன் அபிடவிட்டில் குறிப்பிடவில்லை. மேலும் தனது தரப்பு ஆவணங்களைக்கூட இம்மனுவுடன் மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை. ஆகவே, சமூகம் கோர்ட்டாரவர்கள் தயவு செய்து, மனுதாரர்/பிரதிவாதி பொய் சங்கதிகளைப் புனைந்து தாக்கல் செய்துள்ள இந்த மனுவினை உச்சபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து மேலான ஆணை பிறப்பிக்கவேண்டி

இந்த எதிர்மனுதாரர்/வாதியானவர் சமூகம் கோர்ட்டாரவர்களை பணிவுடன் வேண்டி பிரார்த்திக்கிறார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவிசாரணையின் போது மனுதாரர் தரப்பில் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. ஆவண சாட்சியங்கள் ம.சா.ஆ.1, 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) <u>பிரச்சினை :-</u>

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கப்படலாமா? என்பதே நாம் முடிவு செய்ய வேண்டிய பிரச்சினையாகும்.

அசல் வழக்கானது எதிர்மனுதாரர் / வாதியால் மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு இன்னும் தயாராக இல்லை என தெரிய வருகிறது. இந்த சூழ்நிலையில் மனுதாரர்/பிரதிவாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு, தாவா சொத்தை பார்வையிட்டு அளந்து, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. தாவா சொத்தில் மனுதாரர் / பிரதிவாதிக்கு இருக்கின்ற வண்டித்தட உரிமை மற்றும் தண்ணீர் எடுத்துச் செல்லும் உரிமை ஆகியவை சம்பந்தமாக ஏற்கனவே முந்தைய வழக்கில் முடிவு செய்யப்பட்டதை மறைத்து, முந்தைய வழக்கில் தோற்று போன வாதிகளின் தூண்டுதலால் இந்த எதிர்மனுதாரர் / வாதி இந்த அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி உண்மை நிலவரங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வருவதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் அவசியமானது எனவும், மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. ஆனால் முந்தைய வழக்கு விவரங்கள் எதுவும் இந்த எதிர்மனுதாரர்/வாதிக்கு தெரியாது எனவும், முந்தைய வழக்கு சம்பந்தப்பட்ட எந்த விவரங்களையும் இந்த மனுவில் சொல்லாததால் இந்த மனு அனுமதிக்கப்பட இயலாது எனவும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் எதிருரையில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. முந்தைய வழக்கான அ.வ.எண்.9/2005 வழக்கின் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பின் சான்றிட்ட நகல்கள் ம.சா.ஆ.1, 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி முந்தைய வழக்கில் ஆலமரத்துப்பட்டி கிராமம் சர்வே

எண்.1052/2 மற்றும் 1051/2 சம்பந்தமாக இந்த மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக ஒரு சுப்ரமணி மற்றும் சண்முகம் ஆகியோர்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 23.08.2013ல் தள்ளுபடியாகியுள்ளதாக தெரிய வருகிறது. மேற்படி முந்தைய வழக்கில் பொது வண்டிப்பாதை சம்பந்தமாகவும், அதனடியில் பதிக்கப்பட்டுள்ள விவசாய பயன்பாட்டிற்கான குழாய்கள் சம்பந்தமாகவும் பரிசீலிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மேற்படி உண்மை சங்கதிகளை மறைத்து முந்தைய வழக்கில் தோற்றுப்போன வாதிகளின் தூண்டுதலால் இந்த எதிர்மனுதாரர் / வாதி வேறு வண்டிப்பாதை இருப்பதாக காட்ட முயற்சி செய்து, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேற்படி முந்தைய வழக்கில் காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்கள்.1052/2 மற்றும் 1051/2 ஆகியவைகள் இந்த வழக்கிலும் 2, 3 அயிட்ட சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் காண்கிறது. அவை தவிர சர்வே எண்கள்.1052/1 மற்றும் 1051/3 ஆகியவைகள் கூடுதலாக இந்த வழக்கில் 1, 4 அயிட்ட சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. எனவே அ.வ.எண்.9/2005 வழக்கில் பரிசீலிக்கப்பட்டுள்ள பொது பாதை மற்றும் பதிக்கப்பட்ட குழாய்கள் சம்பந்தமாகதான், இந்த எதிர்மனுதாரர்/வாதி அவரது தாவாவோடு இணைத்துள்ள மாதிரி வரைபடத்தில் காண்பித்துள்ளாரா? அல்லது அதற்கு முரணாக அவரது மாதிரி வரைபடத்தில் வண்டிப்பாதை காண்பித்துள்ளாரா? என்ற கேள்வி இங்கு எழுகிறது. அ.வ.எண்.9/2005 வழக்கில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்களைதான் இந்த வழக்கிலும் இந்த எதிர்மனுதாரர்/வாதி காண்பித்து வண்டிப்பாதையாக இருப்பதாக கூறியுள்ளதால், மேற்படி உண்மை நிலவரங்களை அறிய நீதிமன்ற ஆணையர் நியமனம் அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனெனில் அ.வ.எண்.9/2005 வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்து அதனடிப்படையில்தான் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மேற்படி முன் வழக்கில் இந்த எதிர்மனுதாரர்/வாதி தரப்பினர் இல்லை என்பதால், அந்த வழக்கு நடவடிக்கைகள் இந்த எதிர்மனுதாரரை கட்டுப்படுத்த வாய்ப்பு இல்லை என இந்நீதிமன்றம் காண்கிறது. அதேசமயம் முந்தைய வழக்கில் தோற்றுப்போன வாதிகளின் தூண்டுதலால்தான், அதே பிரச்சனை சம்பந்தமாக இந்த எதிர்மனுதாரர்/வாதி இந்த வழக்கை தாக்கல் செய்து, உண்மை நிலவரங்களை மறைத்துள்ளதாக மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டை

புறம் தள்ள இயலாது என இந்நீதிமன்றம் காண்கிறது. முன் வழக்கில் நீதிமன்ற ஆணையர் காண்பித்துள்ள வண்டிப்பாதை மற்றும் பதிக்கப்பட்ட குழாய்கள் ஆகியவற்றிற்கு முரணாக இந்த எதிர்மனுதாரர்/வாதி வழக்கு நடத்துகிறாரா? என்பதை அறிந்து கொள்வதற்கு இந்த வழக்கிலும் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வது அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே தாவா சொத்தில் நிலவியல் அமைப்புகளை பார்வையிட்டு உரிய முறையில் அளவீடு செய்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தால் மட்டுமே வழக்கு பிரச்சினை பற்றிய உண்மை நிலவரங்கள் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வரும் என இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே இந்த மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

*இறுதியாக, இந்த மனுவில் நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திரு.M.P.செந்தில்குமார் என்பவர் நியமனம் செய்யப்பட்டு, அவரது ஊதியமாக ரூ.3500/- நிர்ணயம் செய்யப்பட்டு மனுதாரர்/பிரதிவாதியால் ஆணையரிடம் நேரடியாக வழங்க உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இருதரப்புக்கும் முறையாக அறிவிப்பு கொடுத்து தாவா சொத்தை சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரி உதவியுடன் அடையாளம் கண்டு, அதன் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு தகுதியான சர்வேயர் உதவியுடன் தேவைப்பட்ட அளவீடுகளை எடுத்து, மனு பிரச்சனை சம்பந்தமாக இருதரப்பு அறிவுரைகளையும் குறிப்பாணை மூலம் பெற்று அதற்கான பதிலோடு சேர்த்து தெளிவான அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. வாய்தா : 15.02.2018.*

இம்மனு உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-ஜெ.செல்வன் ஜேசுராஜா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள்</u> : இல்லை.

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 23.08.2013 | மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.9/2005 தீர்ப்பாணை | சான்று நகல் |
| ம.சா.ஆ.2 | 23.08.2013 | மேட்டூர் மாவட்ட உரிமையியல் | சான்று நகல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் :</u> இல்லை.

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை.

ஒப்பம்/-ஜெ.செல்வன் ஜேசுராஜா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.